# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8109463

1. District : கடலூர் மாவட்டம் | PS: ஊ.த.க. பிரிவு காவல்நிலையம் | Year: 2023 ஆண்டு | FIR No.: 11/2023 மு.த.அ. எண் | Date: 01.09.2023 நாள்

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act 1988 as amended by The Prevention Corruption (Amendment) Act 2018 — Sections பிரிவுகள்: 7, 12
(ii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
Date from நாள் முதல் 31.08.2023 | Date to : நாள் வரை 31.08.2023
Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் 18.00 hrs | Time to : நேரம் வரை 23.55 hrs
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 01.09.2023 | Time : நேரம் 1100 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Vol - III | Time : நேரம் 1100 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — தட்டச்சு புகார் மனு

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் — சுமார் 65 கி.மீ. தென்மேற்கு.
Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி 1ம் இணை சார் பதிவாளர் அலுவலகம், விருத்தாசலம்.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : -- District : --
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் கோ.முருகன் | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் கோவிந்தசாமி
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 52 | (d) Nationality : நாட்டினம் இந்தியன் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் --- | Place of Issue : வழங்கப்பட்ட இடம் ---
(f) Occupation : தொழில் ஆய்வுக்குழு ஆய்வாளர் | (g) Address : முகவரி கடலூர் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அலுவலகம், மாவட்ட ஆட்சியரகம், கடலூர் .

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

**குற்றம்சாட்டப்பட்டவர்கள் வரிசை எண் 1 முதல் 5 வரை தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.**

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

**தாமதம் இல்லை**

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

<u>பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது</u>

இன்று 01.09.2023 ஆம் தேதி காலை 11.00 மணிக்கு கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் நான் பணியில் இருந்தபோது, கோ.முருகன், ஆய்வுக்குழு ஆய்வாளர், கடலூர் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், கடலூர் என்பவர் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று கீழ்க்கண்டவாறு வழக்கு பதிவு செய்யப்பட்டது. புகாரின் விவரம் பின்வருமாறு, அனுப்புநர் கோ.முருகன், ஆய்வுக்குழு ஆய்வாளர், கடலூர் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், கடலூர். பெறுநர் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கடலூர். ந.க.எண்.A/634/2023 நாள் : 01.09.2023, அய்யா, பொருள் : திடீர் ஆய்வு சோதனை விருத்தாசலம் 1ம் இணை சார்பதிவாளர் அலுவலகம் – கைப்பற்றப்பட்ட

(தொடர்ச்சி பக்கம்–3)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு
01.09.2023

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
1/9/23

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
01.09.2023 @ 01.30 hrs.

Name: பெயர் N. DEVANATHAN
Rank: நிலை ADSP.....No. எண் ..........

<u>பக்கம் 1–ன் தொடர்ச்சி</u>

## <u>தனித்தாள்</u>

<u>கடலூர் ஊ.த.க.பிரிவு குற்ற எண். 11/2023–ல் பக்கம் 1 வரிசை எண்.7–ல் கூறியுள்ள குற்றம் சாட்டப்பட்டவர்களின் வரிசை எண் 1 முதல் 5 வரையிலான விவர தனித்தாள் :</u>

1) அ.சங்கீதா, வயது 35, சார் பதிவாளர், 1ம் இணை சார் பதிவாளர் அலுவலம், விருத்தாசலம், கடலூர் மாவட்டம்.

2) வி.உதயகுமார் (34), த/பெ.விஜயகுமார், நெ.63, செங்குந்தர் தெரு, திருமுட்டம், கடலூர் மாவட்டம்.

3) ரா.குமார் (வயது 45), த/பெ.ராமதாஸ், ரியல் எஸ்டேட் உரிமையாளர், நெ.80ஏ, நேதாஜி ரோடு, பெரியார் நகர் வடக்கு, விருத்தாசலம் வட்டம் மற்றும் நகரம், கடலூர் மாவட்டம்.

4) மு.கந்தசாமி, ஆவண உரிமம் எண்.A/107/CDM/1996.

5) பாலதண்டாயுதம், ஆவண எழுத்தர் உரிமம் எண்.A123/CDM/1993.

11/9/23
ADSP

ஆவணங்கள் மற்றும் ரொக்கப்பணம் ஒப்படைப்பு – நடவடிக்கை வேண்டி புகார் மனு சமர்ப்பித்தல் – சம்மந்தமாக. கடலூர் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அலுவலகம், ஆய்வுக்குழு ஆய்வாளர் கோ.முருகன் ஆகிய நான், 31.08.2023 அன்று எனது அலுவலகத்தில் இருக்கும் போது கிடைத்த தகவலின் படி கடலூர் மாவட்டம், விருத்தாசலம் 1ம் இணை சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எழுத்தர்கள் 31.08.2023 அன்று விருத்தாசலம் 1ம் இணை சார்பதிவக சார் பதிவாளர் அ.சங்கீதா என்பவரை சந்தித்து ஆவணங்கள் பதிவு செய்வதற்காகவும் மற்றும் இதர பதிவுகளுக்காகவும் லஞ்சமாக பணம் கொடுக்க போவதாக கிடைக்க பெற்ற ரகசிய தகவலை பெற்று, உடனடியாக நான் புறப்பட்டு எங்களது மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு அருகே இருக்கும் கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு 31.08.2023 அன்று மதியம் சுமார் 01.00 மணிக்கு வந்து அங்கு பணியில் இருந்த கூடுதல் காவல் கண்காணிப்பாளர் ந.தேவநாதன் அவர்களிடம் எனக்கு கிடைத்த ரகசிய தகவலை தெரிவித்தும், மேலும் விருத்தாசலம் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு மாலை சுமார் 06.00 மணிக்கு சென்றால் அங்கு ஆவண எழுத்தர்கள் விருத்தாசலம் 1ம் இணை சார்பதிவகத்தில் பத்திர பதிவிற்கு கொடுக்க உள்ள பணத்தை திடீர் ஆய்வு செய்து கைப்பற்றலாம் என நான் கூறியதன் அடிப்படையில், கூடுதல் காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் இருந்த காவல் குழுவினருடன் ஆலோசனை செய்தார். பின்னர் நானும், கூடுதல் காவல் கண்காணிப்பாளர் ந.தேவநாதன் மற்றும் அவரது காவல் குழுவினர்களும் மாலை 4.00 மணிக்கு அரசு வாகனத்தில் புறப்பட்டு பொன்னேரி பைபாஸ் ரோட்டில் தென்கிழக்கு அமைந்துள்ள 1ம் இணை சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சற்று வெளியே மறைவாக வாகனங்களை நிறுத்தினோம். சிறிது நேரம் எங்களது குழுவினர் அனைவரும் விருத்தாசலம் 1ம் இணை சார்பதிவாளர் அலுவலகத்திற்கு மாலை சுமார் 06.00 மணிக்கு வடமேற்கு பார்த்து அமைந்து இருக்கும் 1ம் இணை சார்பதிவாளர் அலுவலகத்திற்கு உள்ளே சென்றோம். அப்போது சார்பதிவாளர் அவரது இருக்கையில் இல்லை. உடனே அங்கிருந்தவர்களை விசாரித்தபோது, தற்போதுதான் சார்பதிவாளர் புறப்பட்டார் என்று தெரிவித்தனர். அதனை தொடர்ந்து அலுவலத்தில் காவல் குழுவினரை கண்காணிப்பு பணிக்கு நியமனம் செய்துவிட்டு, சார்பதிவாளரை பின்தொடர்ந்து பெண் காவலர் சகிதம் சென்று சார்பதிவாளரை அலுவலகத்திலிருந்து சுமார் 100 மீட்டர் தொலைவில் இருந்தவரை திரும்ப அலுவலகத்திற்கு அழைத்து வந்து அவரது இருக்கையில் அமரவைத்தேன். பின்னர் அவரிடம் என்னையும், கூடுதல் காவல் கண்காணிப்பாளர் மற்றும் காவல் குழுவினரையும் அடையாள அட்டையை சார் பதிவாளரிடம் காண்பித்து அறிமுகம்

செய்து வைத்தேன். பின்னர் அவரை பற்றி விசாரித்த போது தனது பெயர் அ.சங்கீதா, வயது 35, க/பெ N.சிவக்குமார் என்றும் கடந்த 6 மாதங்களாக 1ம் இணை சார்பதிவாளர் அலுவலகத்தில் சார்பதிவாளராக பணிபுரிந்து வருவதாகவும், கதவு எண்.49/4, கந்தசாமிபுரம், உளுந்தூர்பேடை, கள்ளக்குறிச்சி மாவட்டம் என்ற முகவரியில் வசித்து வருவதாகவும் தன்னை அறிமுகம் செய்து கொண்டார். பின்னர் நான் மேற்படி அலுவலகத்தை, சார்பதிவாளர் அ.சங்கீதா என்பவரிடம் ஆய்வு செய்ய போகும் விவரத்தை தெரிவித்தேன். மேலும் சோதனையை துவக்குவதற்கு முன்னர், குழுவில் இடம் பெற்றிருந்த அனைவரும் அவரது முன்னிலையில் சுய சோதனை செய்து குழுவினரிடம் பொருளோ, பணமோ இல்லை என்பதை உறுதி செய்து கொண்டோம். மேலும், விருத்தாசலம் மாவட்ட பதிவாளர் திருமதி.பரமேஸ்வரி அவர்களுக்கு தகவல் தெரித்தன் பேரில் அவர் விருத்தாசலம் சார் பதிவாளர் அலுவலகத்திற்க ஆஜராகி சோதனையின்போது உடன் இருந்தார். மேற்படி விருத்தாசலம் 1ம் இணை சார்பதிவாளர் அலுவலகம் இரண்டடுக்கு கட்டிடத்தில் தரைதளத்தில் இயங்கிவருகிறது. இதன் பிரதான வாயிற்படி வடமேற்கு திசை நோக்கி அமைக்கப்பட்டுள்ளது. இவ்வலுவலகத்தின் முகப்பில் வராண்டா உள்ளது. அதன் தென்கிழக்கில் பிறதான வாயிற்படி அமைக்கப்பட்டுள்ளது. பிரதான வாயிற்படி உள்ளே ஹாலில், கண்ணாடியாளான இரண்டு கதவுகளுடன் கூடிய தடுப்பு அமைக்கப்பட்டுள்ளது. அதில் தென்மேற்கு திசையில் வடமேற்கு பார்த்து சார் பதிவாளர் நாற்காலி மற்றும் மேஜை போடப்பட்டிருந்தது. அவரது மேஜைக்கு தெற்கே ஒரு இரும்பு பீரோ வைக்கப்பட்டிருந்தது. அதனை சோதனை செய்து பார்த்ததில் அதில் ஆவணங்களை அடுக்கி வைக்கப்பட்டிருந்தது. அதில் கைப்பற்றப்படவேண்டிய பொருட்கள் எதுவும் இல்லை. மேலும் அலுவலகத்தில் உள்ள பதிவு வைப்பறை மற்றும் அனைத்து பீரோக்களை சோதனை செய்து பார்த்ததில் மேற்படி அனைத்திலும் ஆவணங்களை அடுக்கி வைக்கப்பட்டிருந்தது. அவற்றில் கைப்பற்றப்பட வேண்டிய பொருட்கள் எதுவும் இல்லை. அலுவலக வளாகத்தில் காவல் குழுவினரை பார்த்தவுடன் தப்பித்து செல்ல முயன்ற இருவரை சந்தேகத்தின் பெயரில் அழைத்து விசாரணை செய்து அவர்களை திரேக சோதனை செய்தபோது 1) மு.கந்தசாமி, ஆவண உரிமம் எண்.A/107/CDM/1996, என்பவரிடம் ரூ.8,500/– இருந்தது குறித்து கேட்க அவர் இந்த பணம் தான் பத்திர பதிவு செய்ததற்காக சார்பதிவாளருக்கு கொடுக்கவேண்டிய லஞ்ச பணம் எனவும், 2) பாலதண்டாயுதம் ஆவண எழுத்தர் உரிமம் எண்.A123/CDM/1993 எனவும், அவரிடம் ரூ.8,500/– இருந்தது குறித்து கேட்க அவர் இந்த பணம் தான் பத்திர பதிவு செய்ததற்காக சார்பதிவாளருக்கு கொடுக்கவேண்டிய லஞ்ச பணம் எனவும்

ரே. தேவராஜ் 11/9/23

கூறினார்கள். மேற்படி இருவர் வைத்திருந்த பணத்தை விசாரணைக்காக கைப்பற்றினேன். பின்னர் சார்பதிவாளர் சங்கீதா வைத்திருந்த கைப்பையை பெண் காவலர் மூலம் சோதனை செய்து பார்த்ததில் அதில் மடிக்கப்பட்ட A4 சீட்டு ஒன்று காணப்பட்டது. அதில் ஒரு மடிப்பில் கருப்பு மையால் வரிசை எண் எழுதப்பட்டு பத்திரத்தின் வகைகள் குறிக்கப்பட்டிருந்தது. மற்றொரு மடிப்பில் கந்தசாமி–3, பழனிவேல்–4, அனந்தகிருஷ்–2, சக்கரவர்த்தி–3, நாகராஜ்–4, பாலதண்டா–1, இம்மானு–1, வனஜா–1, சுந்தரி–1, சுப்பிரமணி–2, தனவேல்–3, திரு–3, சுந்தர்–0+1, பானு–1, மொத்தம்–27 என குறிக்கப்பட்டிருந்தது. மேற்படி சீட்டினை பற்றி சார் பதிவாளரிடம் விசாரித்தபோது, இன்று விருத்தாசலம் சார் பதிவாளர் அலுவலகத்தில் பத்திரபதிவு மேற்கொண்ட ஆவண எண்ணின் கடைசி இலக்கம், ஆவணத்தின் வகை மற்றும் ஆவண எழுத்தர்கள் மற்றும் புரோக்கர்களின் பெயர்கள் குறிக்கப்பட்டுள்ளது என்று கூறினார். மேலும் மற்றொரு மடிப்பில் ஆவண எழுத்தர்கள் மற்றும் புரோக்கர்கள் பெயர் மற்றும் அவர்கள் இன்றைய தினம் பதிவு செய்து பத்திரத்தின் எண்ணிக்கை குறிக்கப்பட்டுள்ளது என்று சொன்னார். இந்த சீட்டு எதற்கு என்று சார் பதிவாளரிடம் கேட்டபோது, பத்திரப்பதிவு செய்ததற்கு வசூல் செய்யப்பட வேண்டிய விவரம் என்று கூறினார். அந்த சீட்டினை எழுதியது யார் என்று கேட்டதற்கு, அவர், அலுவலகத்தில் IP Camera Operator ஆக பணிபுரியும் முகமது அப்துல் காதர் என்பவரால் அலுவலக ஆவணங்களை கணினியில் பார்த்து எழுதி கொடுத்தார் என்று கூறினார். மேற்படி சீட்டினை விசாரணைக்காக கைப்பற்றினேன். மேலும் அவரது மேசை டிராயரில் சோதனை செய்தபோது அதில் ஒரு பகுதியில் நகை வாங்கியதற்கான ரசீதுகள் இருந்தது. அதனை பார்வையிட்டதில் 12.02.2022 ஆம் தேதி GRT Jewellers, Viluppuram–த்தில் ரூ.2,200/–க்கான A.Sivakumar, Kallakurichi என்ற பெயரில் Bill No.GBC2122SA044152 என்ற ரசீதும், 12.02.2022 ஆம் தேதி GRT Jewellers, Viluppuram–த்தில் ரூ.87,100/–க்கான A.Sivakumar, Kallakurichi என்ற பெயரில் Bill No.GBC2122SA044150 என்ற ரசீதும், 20.08.2022 ஆம் தேதி Jain Jewellery, Ulundurpet ரூ.6,773/–க்கான S.Sangeetha, Ulundurpet என்ற பெயரில் Bill No.SN-45418 என்ற ரசீதும், 20.08.2022 ஆம் தேதி Jain Jewellery, Ulundurpet ரூ.1,73,000/–க்கான Ezhilarasi, Ulundurpet என்ற பெயரில் Bill No.GT-117428 என்ற ரசீதும், 20.08.2022 ஆம் தேதி Jain Jewellery, Ulundurpet ரூ.1,84,320/–க்கான Sivakumar, Ulundurpet என்ற பெயரில் Bill No.GT-117396 என்ற ரசீதும், 20.08.2022 ஆம் தேதி Jain Jewellery, Ulundurpet ரூ.1,83,830/–க்கான Sangeetha, Ulundurpet என்ற பெயரில் Bill No.GT-117398 என்ற ரசீதும், 20.08.2022 ஆம் தேதி Jain Jewellery,

ஈ. தேவராஜன் 11/1/23

Ulundurpet ரூ.1,83,330/–க்கான Annadurai, Ulundurpet என்ற பெயரில் Bill No.GT-117399 என்ற ரசீதும், 20.08.2022 ஆம் தேதி Jain Jewellery, Ulundurpet ரூ.1,82,830/–க்கான Mahasri, Ulundurpet என்ற பெயரில் Bill No.GT-117400 என்ற ரசீதும், 20.08.2022 ஆம் தேதி Jain Jewellery, Ulundurpet ரூ.1,82,330/–க்கான Rajaguru, Ulundurpet என்ற பெயரில் Bill No.GT-117401 என்ற ரசீதும், 20.08.2022 ஆம் தேதி Jain Jewellery, Ulundurpet ரூ.1,81,330/–க்கான Surendar, Ulundurpet என்ற பெயரில் Bill No.GT-117403 என்ற ரசீதும், 20.08.2022 ஆம் தேதி Jain Jewellery, Ulundurpet ரூ.1,81,340/–க்கான Ezhilarasi, Ulundurpet என்ற பெயரில் Bill No.GT-117404 என்ற ரசீதும், 20.08.2022 ஆம் தேதி Jain Jewellery, Ulundurpet ரூ.1,80,840/–க்கான Karthik, Ulundurpet என்ற பெயரில் Bill No.GT-117405 என்ற ரசீதும், 20.08.2022 ஆம் தேதி Jain Jewellery, Ulundurpet ரூ.20,101/–க்கான Karthik, Ulundurpet என்ற பெயரில் Bill No.GT-117407 என்ற ரசீதும், மேலும், சார்பதிவாளர் சங்கீதா அவர்களின் கைபேசியை அவரது அனுமதியுடன் அவரது முன்னிலையில் சோதனை செய்ததில், அவரது கைபேசி எண். 9080145456 மேலும் அவரது Whatapp தரவுகளை சோதனை செய்தபோது, அதில் அபித்தா பழமுதிர்சோலை என்ற பெயர் பொறித்த ரசீதில் ரூ.3,50,000/– என குறிக்கப்பட்ட போட்டோ இருந்தது. அதனை பற்றி அவரிடம் விசாரிக்க விருத்தாசலம் சார் பதிவாளர் அலுலகத்தில் தினமும் பத்திரப் பதிவு செய்யும் பத்திரத்தின் தன்மைக் ஏற்பவும், பத்திரத்தின் மதிப்பிற்கு ஏற்ப அதனை தாக்கல் செய்யும் ஆவண எழுத்தர்கள், புரோக்கர்களிடம் லஞ்சமாக பணம் கேட்பேன். அதன்படி அவர்கள் கொடுக்கும் பணத்தை நான் சார் பதிவாளர் அலுவலகத்தில் தனி நபராக பணிபுரியும் உதயகுமார் மூலம் நேரடியாகவும், UPI பரிவர்த்தனை மூலம் GPay, PhonePe, Paytm மூலம் வசூல் செய்வேன். அவரிடம் குறிப்பிட்ட அளவு பணம் சேர்ந்த பிறகு அதனை விருத்தாசலம் பெரியார் நகர் பஸ் ஸ்டாப் அருகே அபித்தா ரியல் எஸ்டேட் உரிமையார் குமாரிடம் கொடுக்க சொல்வேன். ஏற்கனவே நான் குமாரிடம் அவர்கள் ரியல் எஸ்டேட்டால் உளுந்தூர்பேட்டையில் அமைக்கப்பட்டு வரும் திருப்பதி திருமலை என்ற மனைப்பிரிவில் 10 மனைகள் வாங்கிக்கொள்வதாக கூறியிருந்தேன். அதற்கான பணத்தை முன் பணமாக கொடுக்கப்படும் தொகையினை கணக்கு வைத்துக்கொள்ளுமாறு கூறியுள்ளேன். அதன்படி நான் இன்று உதயகுமாரிடம் நான்கு நாட்களாக சேர்ந்திருந்த பணம் ரூ.3,50,000/–த்தை கொடுத்து வர சொன்னேன். அதன்படி உதயகுமார் கொடுத்த பணத்திற்கு அத்தாட்சியாக குமார் பில் போட்டு போட்டோவை எடுத்து தன்னுடைய whatsapp க்கு அனுப்பியிருந்தார். அதுதான் அந்த ரசீது என்று கூறினார். மேலும் சார்பதிவாளர் சங்கீதா அவர்களின் Whatsapp தரவுகள்

FS. [signature] 11/9/23

லஞ்சப் பணம் பரிமாற்றம் தொடர்பான 33 படங்களை பதிவிறக்கம் செய்து பிரதி எடுத்து விசாரணைக்காக கைப்பற்றினேன். பின்னர் அலுவலகத்தில் இருந்த வி.உதயகுமார் (34), த/பெ.விஜயகுமார், நெ.63, செங்குந்தர் தெரு, திருமுட்டம் என்பவரை அழைத்து விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அவர் தனது வாக்குமூலத்தில் தான் சார் பதிவாளர் சங்கீதா அவர்களிடம் பெறும் தினக்கூலி ரூ.500/–க்காக அவர் சொல்லும் அலுவலக வேலைகளை செய்து வருவதாகவும், மேலும், அவர் குறித்து கொடுக்கும் சீட்டில் உள்ள பத்திர பதிவு ஆவண எழுத்தர்கள் மற்றும் புரோக்கர்களிடம் லஞ்சப் பணத்தை பணமாகவும், PhonePe மூலமாகவும் வசூல் செய்வதாகவும் சொன்னார். மேலும், தினமும் வசூல் செய்யும் பணத்தின் விவரத்தை சார் பதிவாளரிடம் சொல்லுவேன். அவர் அப்பணத்தை என்னை வைத்திருக்க சொல்லுவார். ஒரு குறிப்பிட்ட அளவு சேர்ந்த பிறகு, அபித்தா ரியல் எஸ்டேட் அலுவலத்திற்கு சென்று குமார் அவர்களிடம் கொடுத்துவிட்டு வர சொல்லுவார். நானும் அவர் சொல்வது போலவே செய்வேன். நான் பத்திர எழுத்தர்கள் மற்றும் புரோக்கர்களிடம் லஞ்சப்பணம் வசூல் செய்வதற்கு எனக்கு தனியாக தினமும் எனக்கு ரூ.1000/– கொடுப்பார். கடந்த நான்கு நாட்களாக வசூல் செய்த பணம் ரூ.3,50,000/– இருக்கு என்று சார் பதிவாளரிடம் சொன்னேன். அவர் அப்பணத்தை குமாரிடம் கொடுத்துவிட்டு வர சொன்னார். நான் அதுபோலவே அபித்தா ரியல் எஸ்டேட் அலுவலகத்திற்கு சென்று குமார் சொன்ன நபரிடம் கொடுத்துவிட்டு வந்தேன். அதனை தொடர்ந்து நான் உதயகுமாரை அழைத்துக்கொண்டு பெரியார் பேருந்து நிறுத்தம் அருகில் சென்று அபித்தா ரியல் எஸ்டேட் பழ மண்டிக்கு சென்றோம். அங்கிருந்த குமார் என்பவரை உதயகுமார் அடையாளம் காட்டி அறிமுகம் செய்து வைத்தார். அவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அவர் தனது வாக்குமூலத்தில் தான் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருவதாகவும், தான் உளுந்தூர்பேட்டையில் திருப்பதி திருமலை என்ற பெயரில் புதிய மனை பிரிவு அமைத்து வருவதாகவும், அதில் 10 மனைகளை வாங்க விருத்தாசலம் சார் பதிவாளர் சங்கீதா அவர்கள் எங்களுடன் உடன்பாடு செய்துள்ளார். அதற்கான முன்பணத்தை பல்வேறு தவணைகளில் இதுவரை ரூ.42,26,000/– செலுத்தியுள்ளார். அந்த தவணை தொகைகளை அந்த அலுவலகத்தில் வேலை செய்யும் உதயகுமார் கொண்டுவந்து கொடுப்பார். இன்று 31.08.2023 ஆம் தேதி மதியம் 12.00 மணிக்கு ரூ.3,50,000/– கொண்டுவந்து என்னுடைய பழ மண்டியில் கொடுத்தார். அதற்குண்டான ரசீதினை நான் சார் பதிவாளர் சங்கீதாவிற்கு whatsapp மூலம் அனுப்பினேன். மேலும் அவருக்கு அனுப்பிய அசல் ரசீதை எனது பழ மண்டியில் இருந்து எடுத்து ஆஜர் செய்தார். அதனை நான் விசாரணைக்காக கைப்பற்றினேன். மேலும்

ர5. [signature] 1/9/23

அவர் இதற்கு முன்னர் கடைசியாக பெற்ற தவணைகளில் அவரிடம் பெற்ற பணம் ரூ.4,60,000/–த்தை ஆஜர் செய்தார். அவர் ஆஜர் செய்த பணம் ரூ.3,50,000/– மற்றும் ரூ.4,60,000/– ஆக மொத்தம் ரூ.8,10,000/–த்தை விசாரணைக்காக கைப்பற்றினேன். மேலும், அவரிடம் சார் பதிவாளர் சங்கீதா கொடுத்துக்கொண்ட மீத பணம் தொடர்பாக விசாரிக்க அவர் தனது தொழிலில் முதலீடு செய்துள்ளதாக தெரிவித்தார். கைப்பற்றப்பட்ட பணம் மற்றும் உதயகுமாருடன் திரும்ப விருத்தாசலம் சார் பதிவாளர் அலுவலகத்திற்கு வந்தோம். நடந்த விவரம் பற்றி சார் பதிவாளர் சங்கீதா அவர்களிடம் விளக்கிக் கூற அவர் அபித்தா குமார் கூறிய விவரங்கள் அனைத்தும் உண்மை என்பதை ஒப்புக்கொண்டார். பின்னர் 1) வருகை பதிவேடு 01.01.2023 முதல் 31.12.2023, 2) இயக்கப்பதிவேடு (01.01.2023 முதல் 31.12.2023 வரை) 3) கணினியில் இருந்து பதிவிறக்கம் செய்யப்பட்ட அனைத்து வகையான கணக்குகளின் சுருக்கம் (பக்கம் 1 முதல் 3 வரை) ஆகியவை மேல்விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் சோதனையின் போது என்னாலோ, என்னுடன் வந்த கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு கூடுதல் காவல் கண்காணிப்பாளர் மற்றும் அவர்களது குழுவினராலோ மேற்படி அலுவலகத்தில் எனது தலைமையில் ஆய்வு குழு சோதனை செய்த போது எந்தவித ஆவணங்களையோ, பொருட்களையோ சேதப்படுத்தவில்லை, எந்தெந்த ஆவணங்கள்/பொருட்கள் எவ்வாறு எங்கிருந்து எடுக்கப்பட்டதோ, அதே இடத்தில் மீண்டும் வைக்கப்பட்டது. மேலும் எங்களது மேற்படி ஆய்வின் போது அலுவலகத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்கு உடல் ரீதியாகவோ, மன ரீதியாகவோ பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் நடந்து கொள்ளவில்லை. மேலும் இச்சோதனையானது அரசு வகுத்துள்ள கொரானா தடுப்பு நடவடிக்கை வழிமுறைகளை முறையாக பின்பற்றி நடத்தப்பட்டது. இந்த நிகழ்வுகள் தொடர்பாக திடீர் ஆய்வு மகஜர் மாலை 06.00 மணிக்கு துவங்கி இரவு 11.55 மணிக்கு முடிக்கப்பட்டது. மேற்கண்ட திடீர் ஆய்வில் இருந்தும் சம்பவங்களில் இருந்தும், சார்பதிவாளர் சங்கீதா அவர்கள் விருத்தாசலம் 1ம் இணை சார் பதிவகத்திற்கு பத்திர பதிவிற்கு வரும் ஆவண எழுத்தர்கள் மற்றும் புரோக்கர்களிடம் பத்திர பதிவிற்காக ரொக்கமாகவும், நூதன முறையிலும், Gpay, Paytm, PhonePe மூலமும் கேட்டு லஞ்சம் பெறுவது தெரியவருகிறது. மேலும், சார் பதிவாளர் சங்கீதா தான் நேரடியாக லஞ்சப் பணத்தை வசூல் செய்யாமல் அந்த அலுவலகத்தில் தனி நபராக பணிபுரியும் உதயகுமார் என்பவர் மூலம் வசூல் செய்வதும், அந்த வசூல் பணத்தை அபித்தா ரியல் எஸ்டேட் உரிமையார் குமார் என்பவரிடம் 10 மனைகள் வாங்குவதற்காக முன்பணம் கொடுத்துவருவது தெரிகிறது. எனவே, மேற்படி நூதன முறையில் லஞ்சப்பணம் வசூல் செய்யும் சசங்கீதாஆவண எழுத்தர்கள் மற்றும் புரோக்கர்களிடம் ஆவண எழுத்தர்கள் மு.கந்தசாமி மற்றும் பாலதண்டாயுதம்

ஆகியோர்கள் தொடர்ந்து சார்பதிவாளர் சங்கீதா அவர்களிடம் லஞ்சப்பணம் கொடுத்து வருவதாக தெரியவருவதாலும், மேற்படி 1) அ.சங்கீதா, வயது 35, சார் பதிவாளர், 1ம் இணை சார் பதிவாளர் அலுவலம், விருத்தாசலம், கடலூர் மாவட்டம். 2) வி.உதயகுமார் (34), த/பெ.விஜயகுமார், நெ.63, செங்குந்தர் தெரு, திருமுட்டம், கடலூர் மாவட்டம். 3) ரா.குமார் (வயது 45), த/பெ.ராமதாஸ், நெ.80ஏ, நேதாஜி ரோடு, பெரியார் நகர் வடக்கு, விருத்தாசலம் வட்டம் மற்றும் நகரம், கடலூர் மாவட்டம் மற்றும் அவர்களுக்கு லஞ்சப்பணம் கொடுக்கும் ஆவண எழுத்தர்களான 4) மு.கந்தசாமி, ஆவண உரிமம் எண்.A/107/CDM/1996, 5) பாலதண்டாயுதம், ஆவண எழுத்தர் உரிமம் எண்.A123/CDM/1993 ஆகியோர்கள் மீதும் ஊழல் தடுப்பு சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். 31.08.2023 ஆம் தேதி எனது தலைமையிலான திடீர் ஆய்வின்போது கைப்பற்றப்பட்ட கணக்கில் வராத பணம் ரூ.8,27,000/–, (1) ரா.குமார், த/பெ.ராமதாஸ், (2) திருமதி.அ.சங்கீதா, க/பெ N.சிவக்குமார், விருத்தாசலம் 1ம் இணை சார் பதிவாளர், (3) வி.உதயகுமார், த/பெ. விஜயகுமார் ஆகியோரது வாக்குமூலங்கள், கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் மற்றும் தயார் செய்யப்பட்ட அசல் திடீர் ஆய்வு மகஜர் ஆகியவற்றுடன் இன்று 01.09.2023 ந்தேதி காலை 11.30 மணிக்கு, கடலூர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் ஆஜராகி புகார் மனுவை தயார் செய்து தங்களிடம் கொடுக்கிறேன். எனவே நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். (ஒப்பம் xxxx) 01.09.2023 (கோ.முருகன்), ஆய்வுக்குழு ஆய்வாளர், கடலூர் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், கடலூர்.

Sir,

Received the above complaint on 01.09.2023 at about 11.00 hrs., Hence, I registered a case in Cuddalore Vigilance and Anti-Corruption in Cr.No.11/2023, U/s 7, 12 of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 on 01.09.2023 at 12.00 hrs., sd/-xxxxx 01.09.2023 (N.DEVANATHAN), Additional Superintendent of Police, V & AC, Cuddalore.

ந. தேவநாதன் 1/9/23